## வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

**2018–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**

**தீர்மானம் நகல்**

**தீர்மானம் எண் : 171 / 2018, நாள் : 07.09.2018**

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டபிரிவு 82, 83, 84 மற்றும் 85–ன் அடிப்படையில் வெள்ளகோவில் நகாட்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.எ.4) அரசாணை எண். 73, நாள். 19.07.2018 மற்றும் அரசாணை எண். 76, நாள். 26.07.2018–ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொண்டு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் 01.04.2018 முதல் உயர்வு செய்து கொள்ள அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர் / குடியிருப்பு / குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் சொத்துவரி சுய மதிப்பீடு விவர அறிக்கையில் உள்ள விபரங்கள் அடிப்படையாக கொண்டு இருக்கும். நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.08.2018 அன்று நடத்தப்பட்ட சொத்துவரி சீராய்வு தொடர்பான கலந்தாய்வு கூட்ட நடவடிக்கையில் மண்டலங்கள் A, B மற்றும் C என மண்டலங்கள் பிரிக்கப்பட வேண்டும் எனவும், மேலும் மண்டல அடிப்படை மதிப்பு (Zonal value) 01.04.2018 முதல் மறு நிர்ணயம் செய்யவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதன்படி (Zonal value) கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யவும், மேலும் கீழ்கண்டவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் தெரிவித்துள்ள தெருக்களுக்கு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

**I. Zonal value**

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு ரூ. | தற்போது உயர்வு செய்யப்படும் மதிப்பு ரூ. |
| A | 1.25 | 2.50 |
| B | 0.75 | 1.50 |
| C | 0.50 | 1.00 |

**II. A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக நிர்ணயம் செய்ய வேண்டிய தெருக்களின் விபரம்**

| வார்டு எண் | வீதியின் பெயர் | உயர்ந்தபட்ச வாடகை மதிப்பீட்டு பகுதி 'A' Zone | நடுத்தர வாடகை மதிப்பீட்டு பகுதி 'B' Zone | குறைந்தபட்ச வாடகை மதிப்பீட்டு பகுதி 'C' Zone |
|---|---|---|---|---|
| 1 | வேலகவுண்டன் பாளையம் வீதி 1 | – | – | 1 –82 |
| | வேலகவுண்டன் பாளையம் வீதி 2 (அ) காலனி | – | – | 1 –33 |
| | வேலகவுண்டன்பாளையம் வீதி 3 | – | – | 34 – 117 |
| | உப்புப்பாளையம் மேற்கு | – | – | 1 – 119 |
| | உப்புப்பாளையம் மேற்கு 2வது வீதி | – | – | 1 – 55 |
| | நெசவாளர் காலனி | – | – | 1 – 20 |
| | உப்புப்பாளையம் கிழக்கு | – | – | 1 – 115 |
| 2 | திருமங்கலம் | – | – | 1 – 77 |
| | ரெட்டிவலசு | – | – | 1 – 64 |
| | கல்லாங்காட்டு வலசு | – | – | 1 – 91 |
| | குமாரவலசு | – | – | 1 – 106 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருவள்ளுவர் நகர் | – | 1 – 121 | – |
| 3 | திருவள்ளுவர் நகர் | – | 1 – 93 | – |
| | துரைராமசாமி நகர் | 51 – 61 | 1 – 50<br>61 எ – 395 | – |
| | எம். ஜீ. ஆர் நகர் | – | – | 1 – 37 |
| | சலவையாளர் காலனி | – | – | 1 – 20 |
| | அறிவொளி நகர் | – | – | 1 – 70 |
| | நாச்சியப்பகவுண்டன் வலசு | – | – | 1 – 46 |
| 4 | உப்புப்பாளையம் கிழக்கு 1வது வீதி | – | – | 1 – 44 |
| | உப்புப்பாளையம் கிழக்கு இரண்டாவது வீதி | – | – | 1 – 110 |
| | குட்டக்காட்டுப்புதூர் | – | 1 – 74 | – |
| | மு. பழனிச்சாமி நகர் 1வது வீதி | 45 – 52<br>54 – 173<br>187 – 227 | 1 – 44பி<br>52எ – 53எ<br>174 – 186எப் | – |
| | மு. பழனிசாமி நகர் 2வது வீதி | 236 –283டி<br>285 – 331 டி | 228 – 235<br>284 – 284சி | – |
| | மு. பழனிசாமி நகர் 3வது வீதி | 332 – 361<br>362 – 391<br>397 – 672பி<br>673எ – 688 | 361பி<br>392 – 396ஒ<br>672டி | – |
| 5 | உப்புப்பாளையம் ரோடு | 1 – 44 | 45 – 294டி | – |
| | காந்தி நகர் | – | 1 – 179 | – |
| 6 | உப்புப்பாளையம் ரோடு | – | 296 – 480 | – |
| | வீரக்குமார் நகர் | 1 – 103<br>126 – 129எ | – | 104 – 122எ |
| | டி. சி . ரோடு | 1 – 91 | – | – |
| | ஈரோடு ரோடு மேற்கு | 1 – 975 | 977 – 995 | – |
| 7 | ஈரோடு ரோடு கிழக்கு | 2 –1252 | – | – |
| | நடேச கவுண்டர் வீதி | – | 1 – 74 | – |
| | பெரியார் வீதி | – | 1 – 4 | – |
| | அம்மன்கோவில் வீதி | 46 – 78<br>151 – 161 | 1 – 45, 79 – 150<br>161 எ – 250டி | – |
| | டி. சி. ரோடு | 92 – 133 | – | – |
| 8 | கச்சேரி வலசு (பொ) | – | 1 – 114 | – |
| | கச்சேரி வலசு (அ) | – | – | 1 – 94அ |
| | இந்திராகாந்தி நகர் | – | – | 1 – 161 |
| 9 | நடேசன் நகர் | – | 1 – 472 பி | – |
| | சொரியங்கிணத்துப்பாளையம் | – | – | 1 – 95அ |
| 10 | டி. சி. மெயின் ரோடு | 1 – 150 | – | – |
| | மூலனூர் ரோடு | 1 – 66 | 67 – 588எப் | – |
| 11 | சொரியங்கிணத்துப்பாளையம் | – | – | 1 – 200ஜ |
| | சொரியங்கிணத்துப்பாளையம் (அ) | – | – | 1 – 46டி |

| | | | | |
|---|---|---|---|---|
| | செம்மாண்டம்பாளையம் | – | 1 – 183 சி | – |
| 12 | கரட்டுப்பாளையம் (பொ) | – | – | 1 – 158இ |
| | கரட்டுப்பாளையம் (அ) | – | – | 1 –43அ |
| | புள்ளசெல்லிபாளையம் (கி) | – | – | 1 – 19 |
| | புள்ளசெல்லிபாளையம் | – | – | 1 – 77டி |
| | நாச்சிபாளையம் | – | – | 1 – 96 |
| 13 | சுப்பிரமணியகவுண்டன் வலசு | – | – | 1 – 110 |
| | ஒரம்புப்பாளையம் | – | – | 1 – 16 |
| | காளிமுப்பன்பதி | – | – | 1 – 10 |
| | கணபதிபாளையம் | – | – | 1 – 99/1 |
| | அரியாண்டிவலசு | – | – | 2 – 48பி |
| | தண்ணீர்பந்தல் | – | – | 1 – 135 |
| 14 | பச்சாகவுண்டன்வலசு | – | – | 1 – 69எ9 |
| | அகலரைப்பாளையம்புதூர் | – | – | 1 – 192 |
| | அகலரைப்பாளையம்புதூர் 2வது வீதி | – | – | 1 – 43எ,<br>180பி |
| | தீத்தாம்பாளையம் 2வது வீதி | – | – | 1 – 78எ |
| 15 | தீத்தாம்பாளையம் | – | – | 1 – 272டி |
| | சிவநாதபுரம் | – | 1 – 206 | – |
| 16 | டி. சி. மெயின் ரோடு | 151 – 247 | – | – |
| | செம்மாண்டம்பாளையம் ரோடு | 1 – 5, 372 – 384 | 6 – 371 | – |
| | தாராபுரம் ரோடு | 1 – 33 | 33சி – 269எ/1 | – |
| 17 | தாராபுரம் ரோடு | – | 271 – 343 | – |
| | அண்ணாநகர் | – | 1 – 132 | – |
| | எல். கே. ஏ நகர் | – | 1 – 181எப் | – |
| | புதுக்காடு | – | 1 – 209 | – |
| | சீரங்கராயகவுண்டன்வலசு ரோடு | – | 1 – 90எ | – |
| 18 | தாராபுரம் ரோடு | 344 – 455 | – | – |
| | காமராஜபுரம் | – | 1 – 429 | – |
| | டி. சி. மெயின் ரோடு | 251 – 377 அ | – | – |
| 19 | கா. ப. சி. நகர் | 1 – 95எ,<br>492 – 516எ | 96 – 491,<br>517 – 529,533 | – |
| 20 | கா.ப.சி நகர் | 535–606,<br>606சி,606டி,<br>628 – 662 | 530 – 532,<br>533எ, 100, 606எ,<br>606பி<br>607எ – 627 | – |
| | அழகாபுரி நகர் | – | 1 –144 | – |
| | எல். கே. சி நகர் | 176 – 252 | 1 – 175 , 209பி | – |
| | டி. சி. ரோடு மேற்கு | 1–7,<br>7எப் – 7ஐ,<br>67எ3–67எ9,<br>67பி1–67பி6,<br>69சி–116எ,<br>67/7,67/8 | 7எ – 7டி<br>9 – 67எ2<br>67எ10 – 67பி<br>67சி – 67டி(t)<br>67/1 – 67/4<br>68 – 69பி<br>117 – 125, 175எ | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | சீரங்கராயகவுண்டன்வலசு ரோடு | – | 91 – 241எ10 | – |
| | சிவநாதபுரம் | – | 1 – 273கே | – |
| | சீரங்கராயகவுண்டன்வலசு | – | – | 1 – 15எப், 26/1 – 26/3 |
| | காடையூரான்வலசு | – | – | 1 – 123எ |
| | காடையூரான்வலசு 2வது வீதி | – | – | 3–39 |

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1447 / 2018 / அ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 172 / 2018, நாள் : 07.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பொது சுகாதார பணிக்கு Battery operated vehicle – 9 No's சப்ளை செய்யும் பணிக்கு 07.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) Sharp systems, Coimbatore – Online
2) Encon Engineer's, Coimbatore – Online
3) Priyam Industries and Engineering (P) ltd, Chennai - Online

இதில் Sharp systems, Coimbatore நிறுவனம் பணிக்காக டேவணித் தொகையினை உரிய நேரத்தில் நகராட்சியில் சமர்ப்பிக்காத காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை திறந்த ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்த விகிதம் கிடைக்கப்பெற்றுள்ளன.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | Encon Engineer's, Coimbatore | 0.28 % மதிப்பீட்டைவிட குறைவாக |
| 2) | Priyam Industries and Engineering (P) ltd, Chennai | 0.11 % மதிப்பீட்டைவிட குறைவாக |

குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகாரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்த மதிப்பீட்டு தொகை தெரிவித்த Encon Engineer's, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 816 / 2018 / னஇ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 173 / 2018, நாள் : 07.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2018–2019–ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. 200.00 இலட்சம் மதிப்பீட்டில் கரட்டுப்பாளையம் முதல் கணபதிபாளையம் சாலை வரை தார்சாலை அமைத்தல் மற்றும் நடேசன் நகர், எல்.கேசி.நகர், வள்ளியரச்சல் ரோடு, கரட்டுப்பாளையம் குறுக்கு வீதி, சொரியங்கிணத்துப்பாளையம், ஈரோடு ரோடு மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் உள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு 28.08.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்தாரர், முத்தூர். |
| 2) | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், பெரமியம். |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. **30.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (Price bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்தாரர், முத்தூர். | மதிப்பீட்டுத் தொகைக்கு 4.95 % அதிகமாக |
| 2) | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், பெரமியம். | மதிப்பீட்டுத் தொகைக்கு 7.00 % அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்க மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், முத்தூர் அவர்களின் **4.95 %** மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3) தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் பணியின் அவசர அவசியம் கருதி செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், முத்தூர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1292 / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 174 / 2018, நாள் : 07.09.2018**

வெள்ளகோவில் நகராட்சிக்கு **2018–2019–**ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. **200.00** இலட்சம் மதிப்பீட்டில் காடையூரான்வலசு முதல் எல்.கே.சி.நகர் வரை தார்சாலை அமைத்தல் மற்றும் அகலரப்பாளையம்புதூர், தீத்தாம்பாளையம், மு.பழனிச்சாமி நகர், ராஜீவ் நகர், மூலனூர் ரோடு, குமாரவலசு மற்றும் உப்புப்பாளையம் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள தார்சாலைகளை சீரமைத்தல் பணிக்கு **28.08.2018–**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வீரசோழபுரம். |
| 2) | ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர். |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. **30.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (Price bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வீரசோழபுரம். | மதிப்பீட்டுத் தொகைக்கு 4.96 % அதிகமாக |
| 2) | ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர். | மதிப்பீட்டுத் தொகைக்கு 11.96 % அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வீரசோழபுரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்க மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வீரசோழபுரம் அவர்களின் **4.96 %** மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3) தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் பணியின் அவசர அவசியம் கருதி ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1292 / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 175 / 2018, நாள் : 07.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2018–2019–ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவநாதபுரம், கல்லாங்காட்டுவலசு, உப்புப்பாளையம், டி.சி.ரோடு, காந்தி நகர், திருமங்கலம் மற்றும் கே.பி.சி.நகர் பகுதிகளில் உள்ள தார்சாலைகளை சீரமைத்தல் பணிக்கு 28.08.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர். |
| 2) | சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வீரசோழபுரம். |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 30.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (Price bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர். | மதிப்பீட்டுத் தொகைக்கு 5.75 % அதிகமாக |
| 2) | சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வீரசோழபுரம். | மதிப்பீட்டுத் தொகைக்கு 8.91 % அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர் அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க. எண். 1292 / 2018 / இ1, நாள். 30.08.2018–ன் மூலம் கோரப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட **4.94 %** கூடுதலான விலை விகிதத்தில் பணியை செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர் அவர்களின் **4.94 %** மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3) தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் பணியின் அவசர அவசியம் கருதி ஸ்ரீகணேஷ்லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா பி லிட், ஒப்பந்தாரர், முத்தூர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1292 / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 176 / 2018, நாள் : 07.09.2018**

வெள்ளகோவில் நகராட்சியில் நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறைகள் ந.க.எண். 22866 / 2018 / பி3, நாள். 23.08.2018–ல் நகராட்சி பகுதியில் இரண்டு சிறுஉரக்கிடங்கு அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அங்கீகாரம் செய்யப்பட்டதன்பேரில் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த விதிகளின்படி மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் விளம்பரம் வெளியிட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி தினசெய்தி நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டு அதற்கான பட்டியல் ரூ. 31,752 /– பட்டியல் எண். CHN 18-19-1287, நாள். 25.08.2018 மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ. 31,752 /– வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 177 / 2018, நாள் : 07.09.2018**

வெள்ளகோவில் நகராட்சியில் நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறைகள் ந.க.எண். 22866 / 2018 / பி3, நாள். 23.08.2018–ல் நகராட்சிக்கு 9 எண்ணிக்கை Battery operated vehicle சப்ளை செய்ய மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்க ஒப்பந்த விதிகளின்படி மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் விளம்பரம் வெளியிட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி மாலை முரசு நாளிதழில் 24.08.2018–ல் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் ரூ. 18,900 /–க்கு எண். ADB1277, நாள். 24.08.2018 மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 178 / 2018, நாள் : 07.09.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 04.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குச் சொந்தமான பகுதிகளில் உள்ள பூங்காகளுக்கு கம்பிவேலி அமைத்தல் | 5,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.17 % குறைவாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 0.59 % அதிகமாக |

**அலுவலககுறிப்பு**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1575/2018/இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 179 / 2018, நாள் : 07.09.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 04.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கரட்டுப்பாளையம் பகுதியில் | 1,30,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.97 % அதிகமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | Onsite compost centre அமைத்தல் | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.11 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.468/2018/இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 180 / 2018, நாள் : 07.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 04.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சொரியங்கிணத்துப்பாளையம் பகுதியில் Onsite compost centre அமைத்தல் | 1,30,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.97 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.11 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.468/2018/இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 181 / 2018, நாள் : 28.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் TURIP 2018-19-ன்கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ரூ. 500.00 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு ந.க.எண். 12981 / 2018 / இ1, நாள். 17.07.2018 மூலம் அனுமதி வழங்கப்பட்டு இவ்வலுவலக கடிதம் எண். 1292 / 2018, நாள். 09.08.2018 மூலம் ஒரு ஆங்கில மற்றும் தமிழ் நாளிதழ் (அனைத்து பதிப்புகள் தமிழ்நாடு) வெளியிட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தலைமை செயலகம், சென்னை–க்கு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிட கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டு அதற்கான பட்டியல் ரூ. 70088 /–ஐ Ravi Publicity Service நிறுவனத்திடமிருந்து (பில் எண். RPS / 18-19 / 624, நாள். 14.08.2018) கிடைக்கப் பெற்றுள்ளது. மேற்படி தொகையினை பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

அங்கீகாரம் செய்யலாம்.

(ந.க.எண்.          / 2018 / சி1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 182 / 2018, நாள் : 28.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வீடு வீடாகச் சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு 45 DBC பணியாளர்களைக் கொண்டு டெங்குக் காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத் தீர்மானம் எண். 128 / 2018, நாள். 12.06.2018–ல் அனுமதிக்கப்பட்டதில் அனுமதி காலம் 30.09.2018 உடன் முடிவடைகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின கடிதம் ந.க.எண். 1588 / ஜே1 / 2015, நாள். 16.10.2015 மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 509 /

அ2 / 2010, நாள். 07.10.2015–ல் நகராட்சி பகுதிகளில் வீடு வீடாக சென்று டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்காலிகப் பணியாளர்களை 300 வீடுகளுக்கு 1 களப்பணியாளரை நியமனம் செய்யவும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் கண்ட நபர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது டெங்கு காய்ச்சல் எனத் தெரிந்தால் உடனே அப்பகுதியில் அதிகமான DBC க்களை நியமித்து 300 வீடுகளுக்கு 2 களப்பணியாளர்களை நியமனம் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 16828 வீடுகள் உள்ளதால் 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் என்ற அடிப்படையில் 16828 வீடுகளுக்கு 56 தற்காலிக DBC களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தலாம்.

எனவே 01.10.2018 முதல் 31.12.2018 வரையிலான காலத்திற்கு 56 தற்காலிக களப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்தரவு ந.எ.எண். 6816 / 2018 / உ3, நாள். 18.09.2018 திருப்பூர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப்படி பணியில் ஈடுபடுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 17,00,000 /–ம் ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 862 / 2015 / ஹெச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

## <u>தீர்மானம் எண் : 183 / 2018, நாள் : 28.09.2018</u>

நகராட்சி சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கான குத்தகை காலம் வருகிற 31.10.2018–ம் தேதியுடன் முடிவடைகிறது. குத்தகைதாரரால் வசூல் செய்யப்பட வேண்டிய வாகன நிறுத்திற்கான கட்டணம் திருப்பூர் மாவட்ட அரசிதழ் ஆகஸ்ட் 2012–ல் உள்ளவாறு சைக்கிள் ஒன்றுக்கு ரூ. 3 /– மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூ. 5 /–ம் (24 மணிநேரத்திற்கு மட்டும்) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டணம் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே தற்போது உள்ள சந்தை மதிப்பின் படியும் பொருளாதார வளர்ச்சியின் படியும் மேற்படி கட்டணம் குறைவாக உள்ளது. எனவே நகராட்சியின் வருவாய் பெருக்கும் நோக்குடன் சைக்கிள் நிறுத்த நாள் ஒன்றுக்கு ரூ. 5 /–ம், மோட்டார் சைக்கிள் நிறுத்த நாள் ஒன்றுக்கு ரூ. 8 /–ம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி கட்டண உயர்வு மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

## <u>தீர்மானம் எண் : 184 / 2018, நாள் : 28.09.2018</u>

2017–18–ம் ஆண்டுக்கு தயார் செய்யப்பட்ட வெள்ளகோவில் நகராட்சியின் நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். / 201 / சி1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

## <u>தீர்மானம் எண் : 185 / 2018, நாள் : 28.09.2018</u>

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட கே.பி.சி.நகர் பழைய தபால் நிலையத்திற்கு தென்புற வீதியில் குடிநீர் விநியோகக் குழாயில் பழுது ஏற்பட்டு சாக்கடை கழிவுநீர் கலந்து உள்ளதால், அப்பகுதி முழுவதும் குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் உள்ளது. மேலும் குழாய் அமைந்துள்ள சாலை கான்கீரிட் சாலையாக உள்ளதால் சாலை சேதமடையாமல் இருக்க GI குழாய் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ. 60,000 /–க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்றஅனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிட்டமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண். / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 186 / 2018, நாள் : 28.09.2018**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34, அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க, வெள்ளகோவில் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறுமற்றும் ஆழ்துளைக்கிணற்றுநீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர்சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 21 வார்டுகளில் ரூ. 378.00 இலட்சம் (ரூபாய். முண்ணூற்றி எழுபத்தெட்டு லட்சம்) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்துகொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்கதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்தமற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும் இதற்கான அனுமதி நகரரட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதிபெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்புநிலையம் அமைக்கதேர்ந்தெடுக்கப்பட்டஇடம் |
|---|---|---|
| 1 | 1 | உப்புப்பாளையம் பொதுக்கிணறு |
| 2 | 2 | குமாரவலசு பொதுக்கிணறு |
| 3 | 3 | திருவள்ளுவர் நகர் பொதுக்கிணறு |
| 4 | 4 | நகராட்சி அலுவலகம் ஆழ்குழாய் கிணறு |
| 5 | 5 | காந்திநகர் விநாயகர்கோவில் பின்புறம் ஆழ்குழாய் கிணறு |
| 6 | 6 | பேருந்து நிலைய வளாகம் ஆழ்குழாய் கிணறு |
| 7 | 7 | அம்மன்கோவில் வீதி சர்ச் அருகில் ஆழ்குழாய் கிணறு |
| 8 | 8 | இந்திராநகர் ஆழ்குழாய் கிணறு |
| 9 | 9 | நடேசன் நகர் ஆழ்குழாய் கிணறு |
| 10 | 10 | மூலனூர் ரோடு பொதுக்கிணறு |
| 11 | 11 | சொரியங்கிணத்துப்பாளையம் (காலனி) ஆழ்குழாய் கிணறு |
| 12 | 12 | கரட்டுப்பாளையம் ஆழ்குழாய் கிணறு |
| 13 | 13 | அரியாண்டிவலசு பொதுக்கிணறு |
| 14 | 14 | தீத்தாம்பாளையம் (காலனி) ஆழ்குழாய் கிணறு |
| 15 | 15 | சிவநாதபுரம் அங்காடி மையம் அருகில் ஆழ்குழாய் கிணறு |
| 16 | 16 | தாராபுரம் ரோடு பள்ளி அருகில் கிணறு |
| 17 | 17 | புதுக்காடு ஆழ்குழாய் கிணறு |

| | | |
|---|---|---|
| 18 | 18 | காமராஜபுரம் ஆழ்குழாய் கிணறு |
| 19 | 19 | கா.ப.சி.நகர் ஆழ்குழாய் கிணறு |
| 20 | 20 | எல்.கே.சி.நகர் ஆழ்குழாய் கிணறு |
| 21 | 21 | சிவநாதபுரம் ஆழ்குழாய் கிணறு |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 1626 / 2018 / இ1,

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 187 / 2018, நாள் : 28.09.2018**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட காடையூரான்வலசு மற்றும் எல்.கே.சி.நகர் மேற்கு பகுதிகளை சிவநாதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள 3.30 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி குடிநீர் விநியோகக் குழாய்களுடன் இணைக்க இணைப்பு வேலைகள் மற்றும் கேட் வால்வுகள் பொருத்த வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ. 1,10,000 /–ம், மேற்படி பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி8ள் வரவேற்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 188 / 2018, நாள் : 28.09.2018**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்கு பழுதுகளை பொதுமக்கள் புகார் செய்ய வசதியாக கம்பங்களுக்கு அடையாள எண் எழுதவும், புகார் தெரிவிக்கும் அலைபேசி எண்–ஐ விளம்பரப்படுத்த பலகை வைக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களால் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு ரூ. 2,00,000 /–ம் ஆகும்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி8ள் வரவேற்க ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 189 / 2018, நாள் : 28.09.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 18.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட எல்.கே.சி.நகர் பகுதியில் சிறு உரக்கிடங்கு MCC அமைத்தல் | 30,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர் | 4.84 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், பெரமியம் | 5.88 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

**அலுவலககுறிப்பு**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 816 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

## தீர்மானம் எண் : 190 / 2018, நாள் : 28.09.2018

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 18.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை வளாகத்தில் சிறு உரக்கிடங்கு MCC அமைத்தல் | 30,00,000 | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், எல்.கே.சி.நகர் | 4.86 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன், பெரமியம் | 5.88 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

**அலுவலககுறிப்பு**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், எல்.கே.சி. நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 816 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

## தீர்மானம் எண் : 191 / 2018, நாள் : 28.09.2018

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 18.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சி காமராஜபுரம் பகுதியில் 10000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி அமைத்தல் | 3,50,000 | ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர் | 4.89 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 6.11 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

**அலுவலககுறிப்பு**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த ஆர். சிங்காரம், ஒப்பந்ததாரர், எல்.கே.சி. நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1412 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

## தீர்மானம் எண் : 192 / 2018, நாள் : 28.09.2018

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 18.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வீரக்குமாரசுவாமி கோவிலுக்கு எதிரில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் | 4,00,000 | சன் பவர் டிரேடர்ஸ், திண்டுக்கல் | 0.00 % மதிப்பீட்டு விலை |
| | | | வாட்டர் டெக்னாலஜிஸ், திண்டுக்கல் | 5.05 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த சன்பவர் டிரேடர்ஸ், ஒப்பந்ததாரர், திண்டுக்கல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1412 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 193 / 2018, நாள் : 28.09.2018</u>**

நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை வளாகம், எல்.கே.சி.நகர் லாரி செட் பகுதிகளிலும் உரக்கிடங்கு பகுதியில் வின்ட்ரோஸ் தளத்திலும் ஈரப்பதமான குப்பைகளை உரமாக்கும் பகுதிகளுக்கு குப்பைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டுவதற்கு 3 shredding machine தேவைப்படுதாக சுகாதார ஆய்வாளர் அறிக்கை அளித்துள்ளால், Micro compost centre அமைக்கும் இடங்களில் shredding machine அமைக்க மதிப்பீடுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரக்கிடங்கு பகுதியில் மட்டும் ஒரு shredding machine வாங்கி பொருத்தப்பட வேண்டியுள்ளது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 6,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 816 / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 194 / 2018, நாள் : 28.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சியின் பணிபுரிந்து வரும் பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர், ஓட்டுநர்கள், காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு தீபாவளிப் பண்டிகைக்கு சீருடை துணிகள், தையல் கூலி மற்றும் காலணிகள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 85,000 /–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்கு ஆகும் செலவினத்தை பொது நிதி வரவின கணக்கிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியாளர்களுக்கு சீருடை துணிகள் அரசு நிறுவனமான கோ–ஆப்டெக்ஸில் வாங்கி வழங்கவும், பட்டியல் தொகையை இந்நிறுவனங்களுக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 195 / 2018, நாள் : 28.09.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி சர்வே எண். 845பி, கணபதிபாளையம் ரோடு, வெள்ளகோவில் என்ற இடத்திலுள்ள செந்தூர் ஆண்டவர் ஸ்பின்னிங் மில்லினை அகற்றுவது தொடர்பாக திரு. Dr.S.S. சிவக்குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இதில் 5–வது எதிர்மனுதாரராக வெள்ளகோவில் நகராட்சி ஆணையர் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கு எதிர்வாதுரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு திரு. ஆர். கோவிந்தசாமி, சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு

அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூபாய். 15,000 /—ம் கோரிய கடிதம் நாள். 18.12.2017—ல் வரப்பெற்றுள்ளது. எனவே வழக்கறிஞர் திரு. ஆர். கோவிந்தசாமி, சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு ரூ. 15,000 /—ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2103 / 2017 / அ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 196 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த குடிநீர் திட்டங்களின் மூலமாக ஏற்கனவே 6 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் காவிரி குடிநீர்த் திட்டத்தில் 1 மின்மோட்டார் மற்றும் அமராவதி குடிநீர் திட்டத்தின் மூலம் 1 மின்மோட்டார் என்ற விநியோக முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இதில் கீழ்கண்டுள்ள குடிநீர் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

1) குழாய் ஆய்வாளர் —1
2) பொருத்துனர் —1
3) மின்பணியாளர்—2
4) குடிநீர் விநியோக உதவியாளர்—1
5) குழாய் திறப்பாளர்கள்—3
6) காவலர்கள்—1

தற்சமயம் இரண்டாவது காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் நடைமுறைக்கு வருவதால், கூடுதலாக 6 மேல்நிலைத் தொட்டிகள் மூன்று மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் நீரேற்றம் என திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே உள்ள பணியாளர்கள் போதுமானதாக இல்லை. இதுதவிர தலைமை நீரேற்று நிலையம் புதுப்பை மற்றும் நீருந்து நிலையம் வெள்ளகோவில் ஆகியவற்றையும் பராமரிக்க வேண்டியுள்ளது. எனவே கூடுதலாக மூன்று டர்ன்கார்க் தேவைப்படுகிறது.

மேலும் பொறியியல் பிரிவு பணிகளை கவனிக்க ஒரு ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு ஓட்டுநர் இல்லாததால் முழுமையாக பயன்படுத்த இயலவில்லை. எனவே இதற்கு ஒரு ஓட்டுநர் தேவைப்படுகிறது.

எனவே மேற்படி தேவைப்படும் டர்ன்கார்க் —3 பேர் மற்றும் ஓட்டுநர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 3,20,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிட்டமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். / 2018 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 197 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் காற்றழுத்த மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டங்களில் கீழ்காணும் இடங்களில் HDPE Hose பைப்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டுக் கொண்டுள்ளது. இதனால் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த பழுதுகள் சரிசெய்ய HDPE Hose பைப் புதியதாக மாற்றி பொருத்த வேண்டியுள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 10,00,000 /—ம் ஆகும். மேற்பி பணியினை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) LKC Nagar (புற்றுக்கண்)
2) TC Road West (மகேஷ் பைப் கம்பெனி எதிரில்)
3) Pachappali (புள்ளசெல்லிபாளையம் பிரிவு)
4) Rettivalasu
5) Kallankattuvalasu West

6) Sivakumar Nagar
7) Tiruvalluvar Nagar (குறிஞ்சி பள்ளி அருகில்)
8) Tiruvalluvar Nagar (ஓம்சக்தி கோவில் அருகில்)
9) Muthukumar Nagar
10) Thappakkulam
11) Indira Nagar
12) Karattupalayam AD colony
13) Pullachellipalayam
14) Theethampalayam AD colony
15) Rajiv Nagar (40 அடி ரோடு)
16) Dharapuram Road (விநாயக முருகன் கடை)
17) KPC Nagar (ஆனந் வீடு அருகில்)
18) KPC Nagar (மாதா சிலை)
19) KPC Nagar (M.M. திருமண மண்டபம்)
20) LKC Nagar (சுதா வீடு அருகில்)

அலுவலககுறிப்பு

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 198 / 2018, நாள் : 28.09.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரையிலான பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள், மெயின் குழாய்கள், கேட் வால்வுகள், பொதுக்குழாய்கள் மற்றும் கைபம்புகளின் மூலமாக அமராவதி மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் உள்ளூர் நீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குழாய்கள் மற்றும் உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இந்த பராமரிப்பு பணிகளை 2018–19–ம் ஆண்டு 31.03.2019 வரை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975/ 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 199 / 2018, நாள் : 28.09.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரையிலான பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள், மெயின் குழாய்கள், கேட் வால்வுகள், பொதுக்குழாய்கள் மற்றும் கைபம்புகளின் மூலமாக அமராவதி மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் உள்ளூர் நீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குழாய்கள் மற்றும் உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இந்த பராமரிப்பு பணிகளை 2018–19–ம் ஆண்டு 31.03.2019 வரை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975/ 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 200 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரையிலான பகுதிகளில் சிறுமின்விசைம்பபம்பு திட்டங்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சிறுமின்விசைப்பம்பு திட்டங்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஒப்பந்த அடிப்படையில் 2018–19–ம் ஆண்டு 31.03.2019 வரை இப்பணிகளை மேற்கொள்ளவும், இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 201 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரையிலான பகுதிகளில் சிறுமின்விசைம்பபம்பு திட்டங்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சிறுமின்விசைப்பம்பு திட்டங்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஒப்பந்த அடிப்படையில் 2018–19–ம் ஆண்டு 31.03.2019 வரை இப்பணிகளை மேற்கொள்ளவும், இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975/ 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 202 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 9–வது வார்டு சொரியங்கிணத்துப்பாளையம் மாரியம்மன்கோவில் தென்புறமாக அமைக்கப்பட்டுள்ள தார்சாலை சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகும். இந்த சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், இப்பகுதி பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த சாலையை சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். எனவே இந்த தார்சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1735/ 2018/இ1

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 203 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டு திருமங்கலம் ஊரின் கிழக்கு பகுதியில் விநாயகர் கோவில் வழியாக செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுவதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே இந்த தார்சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1735/ 2018/இ1

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 204 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 8–வது வார்டு இந்திராநகர் பகுதிகளில் கிழக்கு பகுதி மற்றும் தெற்கு பகுதிகளில் தார்சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுவதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே இந்த தார்சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1735/ 2018/இ1

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 205 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வள்ளியரச்சல் ரோடு பகுதியில் (மேற்கு) அமைக்கப்பட்டுள்ள தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இந்த சாலை அமைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. சாலை பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த சாலையை சீரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரி வருகின்றனர். எனவே இந்த தார்சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1735/ 2018/இ1

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 206 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் wet waste களை சேகரமாகும் பகுதிகளிலேயே onsite compost centre அமைத்து உரமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி கீழ்காணும் இடங்களில் onsite compost centre அமைக்க உத்தேசிக்கப்பட்டு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

1) தீத்தாம்பாளையம்
2) கல்லாங்காட்டுவலசு
3) அறிவொளி நகர்
4) தண்ணீர்பந்தல்
5) இந்திராநகர்
6) கச்சேரிவலசு

மேற்கண்ட இடங்களில் onsite compost centre அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 468/ 2018/இ1

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 207 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கா.ப.சி.நகர் குறுக்கு வீதிகள், காமராஜபுரம் மற்றும் இந்திராநகர் பகுதிகளில் தார்சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த தார்சாலைகளை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 6,20,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு –</u>மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1735 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 208 / 2018, நாள் : 28.09.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 17—வது வார்டு அண்ணா நகர் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த தார்சாலைகளை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5,65,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1735 / 2018 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. அ. சங்கர்**
**தனி அலுவலர் /**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**
**திருப்பூர் மாவட்டம்**